**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் நாள் திங்கள்கிழமை

இடை மனு எண். 2/2023-ன் அசல் வழக்கு எண். 274/2015

சம்மந்தன் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. கணபதி
2. சேகர்
3. தணிகைவேல்
4. புனிதவதி
5. தரணிபாய்
6. பாலமுருகன்
7. சக்திவேல்
8. தினகரன்
9. மணிகண்டன்
10. தமிழ்செல்வம்
11. மணிவண்ணன் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 02.03.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. நெடுஞ்செழியன், அவர்கள் முன்னிலையாகியும், 1,2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.U.ஹரிகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுந்தரம், அவர்கள் ஆஜராகியும், 11ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.நந்தகுமார், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டுக்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் மனுவில் கண்டுள்ள ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஆவணங்களை மனுதாரர் / வாதி

தரப்பு ஆவணமாக ஏற்று உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரரின் மனுவின் சுருக்கம்</u>:-**

இவ்வழக்கில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. தாவா 1வது அயிட்ட சொத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தாவா 2 முதல் 25 வரையுள்ள அயிட்ட சொத்துக்களை சேர்க்க கோரியதன் பேரில் இந்த வழக்கில் அவற்றை சேர்த்துள்ளார். 2,3,4,5,6,14 ஆகிய சொத்துக்கள் குறித்து ஏற்கனவே தனக்கும் 1,2 பிரதிவாதிகளுக்குமிடையே கூர்சீட்டின் மூலம் பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது. தாவா 7,8,10 அயிட்ட சொத்துக்கள் தனக்கு தனது தாயார் தான செட்டில்மென்ட் மூலம் அளித்தது. 11வது அயிட்ட சொத்து தனக்கு அரசாங்கத்தால் பட்டாவழங்கப்பட்டது என்றும், 12 மற்றும் 17வது அயிட்ட சொத்தில் பாதி ஆகிய்வற்றில் தான் சுயார்ஜிதமாய் கிரையம் பெற்றதாகவும், மேற்படி சொத்துக்கள் அனைத்தும் தனக்கு தனிப்படட் முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும் என்றும், 7,8,9,10 அயிட்ட சொத்துக்கள் குறித்து தான செட்டில்மென்ட் பத்திரத்தை ஏற்கனவே அசல் வழக்கு எண் 107/2016ல் தாக்கல் செய்துள்ள்தாகவும், 11வது அயிட்ட சொத்து குறித்த பட்டா 12 மற்றும் 17வது அயிட்ட சொத்துக்கள் குறித்த கிரையப்பத்திரம் ஆகியவற்றை தற்போது தேடி எடுத்து தாக்கல் செய்வதாகவும், இந்த ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் தெய்வாதீனமானது, மன்னிக்கக் கூடியது என்றும், எனவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1,3 முதல் 11ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:</u>**

(i). மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் பொய்யானவை, மோசவிதமானவை, சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவா 1ம் அயிட்ட சொத்து இவ்வெதிர்மனுதாரரின் தாயார் பாச்சாம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், 1 முதல் 10 வரையுள்ள எதிர்மனுதாரர்கள் அவருடைய வாரிசுகள் என்பதால் மேற்படி 1ம் அயிட்ட சொத்து பாக உரிமையுள்ள சொத்து என்றும், 2 முதல் 7 மற்றும் 9 அயிட்ட சொத்துக்கள் இவ்வெதிர்மனுதாரரின் தந்தை செல்லபெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். 1 முதல் 10 வரையுள்ள

எதிர்மனுதாரர்கள் அவருடைய வாரிசுகள் என்பதால் மேற்படி 2 முதல் 7 மற்றும் 9 அயிட்ட சொத்துக்கள் யாவும் பாக உரிமையுள்ள சொத்து என்றும், தாவா 8, 10 அயிட்ட சொத்து மனுதாரருக்கு அவருடைய தாயார் தான செட்டில்மென்ட் மூலம் அளிக்கப்பட்டது என்பது தவறாகும். 8ம் அயிட்ட சொத்து இவ்வெதிர்மனுதாரரின் தாயார் பாச்சாம்மாள் என்பவர் கிரையம் பெற்ற சொத்து என்றும், மேற்படி 8ம் அயிட்ட சொத்தினை 1 மற்றும் இவ்வெதிர்மனுதாரர் ஆகியோர்களுக்கு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் மூலம் வழங்கப்பட்டது ஆகும். தாவா 11ம் அயிட்ட சொத்து இவ்வெதிர்மனுதாரர் செல்லப்பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மனுதாரருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டா என்று மனுதாரர் மனுவில் கூறியுள்ளது தவறு. 8ம் அயிட்ட சொத்து 119/4-435 சதுர மீட்டர் வீடு மற்றும் காலிமனை உட்பட 1ம் எதிர்மனுதாரர் மற்றும் இவ்வெதிர்மனுதாரர்களின் திருமண செலவிற்காக ஒதுக்கப்பட்ட சொத்து. மேற்படி சொத்து இவ்வெதிர்மனுதாரர்களின் தனிப்பட்ட சொத்து. மனுதாரர் தாவா 11வது அயிட்ட சொத்தின் நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா, தாவா 12வது அயிட்ட சொத்தினை மனுதாரர் கிரையம் பெற்ற பத்திரம், தாவா 17ம் அயிட்ட சொத்தினை மனுதாரர் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம், 10.07.1980 தேதியில் ரங்கநாதன் என்பவர் சுந்தரவள்ளி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற பத்திரம் ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் மன்னிக்கக் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி அசல் வழக்கினை விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தற்போது மேற்படி காலதாமதத்தினை மன்னிக்கக் கோரும் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்புடையதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும், எனவே மனுதாரரின் இம்மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii). 4 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக்கொள்வதாக கூறி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். மேலும் 11ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரும் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக்கொள்வதாக கூறி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்.

4. மனுதாரரின் மனு, எதிர்மனுதாரர் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் தனது வாதத்தில், தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் ஆவணங்கள் என்றும், இந்த ஆவணங்கள் மனுதாரர் வழக்கை நிரூபணம் செய்ய தேயைான ஆவணம் என்றும் எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. கற்றறிந்த 1 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் தங்களது வாதங்களில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள், காலதாமதமாக தாக்கல் செய்துள்ளவை ஏற்கக்கூடாது என்றும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனு எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டுமாறு வாதிட்டார்கள்.

7. **<u>தீர்வு</u> :-**

இருதரப்பு வாதம் மற்றும் மனுக்கள் ஆவணங்கள பரிசீலனை செய்ததில், இந்த மனுவின் மனுதாரர்/வாதி இவ்வழக்கை நடத்த தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தேவையான ஆவணங்கள என்றும் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட இயலாததால் தற்போது தாக்கல் செய்வதாகவும், எனவே இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், காலதாமதம் மன்னிக்கக் கூடாது என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் ஆவணங்கள். மேலும் மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்ய தேவையான ஆவணங்கள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான கஷ்ட, நஷ்டமும் இல்லை, மாறாக ஆவணத்தின் வாயிலாக மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய ஒரு வாய்ப்பு உள்ளது. தள்ளுபடி செய்யும் பட்சத்தில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே சமநோக்கு மனு மனுதாரருக்கே உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இந்த ஆவணங்களை வழக்கு கோப்பில் பெற்றுக்

கொள்ள உகந்த ஆவணங்கள் என்றும், எனவே நீதியின் நலன்பால் இம்மனு அனுமதிக்க உகந்தது என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபயதரப்பினர் மனுவின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்க வேண்டியது என்று தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-

இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-

இல்லை

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.